# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 22 புதன்கிழமை 07.08.2024 கதிர் 324







# மொட்டுவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ களமிறங்குகின்றார்

## இறுதி நேரத்தில் பின்வாங்கிய தம்மிக்க பெரேரா

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார். இன்று காலை 7.00 மணிக்கு கொழும்பு, பத்தரமுல்லையிலுள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினார்கள், மற்றும் பிரமுகர்கள் கலந்துகொண்ட கூட்டத்தின் பின்னர் இந்த முடிவு அறிவிக்கப்பட்டது.

2



# 65 இலட்சம் நுட்பமான முறையில் கையாடல் பெண் ஒருவர் உட்பட இருவர் யாழில் கைது

மற்றொருவரது வங்கிக் கணக்கில் இருந்த 65 லட்சம் ஷரூபாவை கையாடல் செய்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணத்தில் பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பணத்தை இழந்தவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஆலோசனைக் கட்டணங்கள் தவிர வேறு எந்தக் கட்டணமும் இன்றி வெளிநாட்டுக்கு அனுப்பப்படும் என்று சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட விளம்பரத்தை பார்த்து யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த ஒருவர் அதில் குறிப்பிடப்பட்டிருந்த உள்நாட்டு மற்றும் பிரிட்டன் தொலைபேசி எண்களுக்குத் தொடர்பு கொண்டுள்ளார்.

அந்தத் தொலைபேசி இலக்கங்களில் பேசியவர்கள், விசாவைப் பெறுவதற்கு வங்கிக்கணக்கில்ஒரு தொகைப்பணத்தை வைப்பிட்டுக்காட்டவேண்டும்என்றும், சில ஆவணங்களைத் தங்களுக்கு அனுப்ப வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர். தொலைபேசியில் பேசியவர்களின் கதையை நம்பி, தனது கடவுச்சீட்டு பிரதிகள், அடையாள அட்டைப் பிரதிகள் உட்பட பல ஆவணங்களை அவர்கள் குறிப்பிடப்பட்ட கொழும்பு விலாசத்துக்கு அனுப்பியுள்ளார்.

அதனைவிட அவர்கள் குறிப்பிட்ட தொகையை தனது வங்கிக் கணக்கில் வைப்பிலிட்டு, வங்கிச் செயலியில் கணக்கு மீதியை ஸ்கீரின் சொஷ் எடுத்தும் அனுப்பியுள்ளார். இந்தநிலையில் கடந்த 27ஆம் திகதி குருநகரைச் சேர்ந்தவரது கைபேசி இலக்கம் செயலிழந்துள்ளது.

சிலநாள்களின் பின்னர் வங்கிக்குச் சென்று தனது கணக்கு மீதியைச் சரிபார்த்தபோது, அவருக்கு

2

# பொது வேட்பாளராக அரியநேத்திரன்? உத்தியோகபூர்வ அறிவிப்பு நாளை

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளராக மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் எம்.பி.பா.அரியநேத்திரன் களமிக்கப்படுவார் என்பது பெரும்பாலும்உறுதியாகியுள்ளது. இது தொடர்பான அதிகாபுர்வ அறிவிப்பு நாளை காலை யாழ்ப்பாணத்தில் நடைபெறும் வைபவம் ஒன்றில் வைத்து வெளியிடப்படும் என்று நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்ப் பொதுவேட்பாளர் தெரிவிக்கு பல பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்த போதிலும், சட்டத்தரணி கே.வி. தவராஜா, மற்றும் பா.அரியநேற்திரன் ஆகியோரின் பெயர்களே இறுதிக்கட்ட பரிசீலனையில் இருந்தன. தமிழ்த் தேசியப் பொதுக் கட்டமைப்பு இந்த இரண்டு பெயர்களையும் பரிசீலனை செய்து இறுதியாக அரியநேத்திரனை தெரிவு செய்திருப்பதாகத்

2

# வைத்தியர் அர்ச்சுனா பிணையில் விடுதலை

சாவகச்சேரி வைத்தியசாலையில் முன்னாள் வைத்தியர் அத்தியட்சகர் வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவுக்கு மன்னார் நீதவான் நீதிமன்றினால் சரீரப் பிணை வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

மன்னார் வைத்தியசாலைக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்து கடமைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியதாக அவருக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

கடமையில் இருந்த வைத்தியர்கள் மற்றும்வைத்தியசாலை பணியாளர்களை அச்சுறுத்தும்வகையில்நடந்துகொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை சுமத்தி வைத்தியசாலை நிர்வாகம் அவருக்கு எதிராக முறைப்பாடு செய்திருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கடந்த சனிக்கிழமை வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனாவை கைது செய்தனர். இதனையடுத்து நீதவான் முன்னிலையில் முற்படுத்திய வேளை, வைத்தியரை இன்று வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இந்தநிலையில், கையில்விலங்கிடப்பட்ட நிலையில், வைத்தியர் அர்ச்சுனா இன்று நீதிமன்றம் அழைத்துவரப்பட்டிருந்தார். இதனையடுத்து, வைத்தியர் அர்ச்சுனா இரண்டு சீரப்பிணையில்செல்ல மன்னார் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

# இலங்கை - இந்திய கப்பல் சேவை மீண்டும் ஆரம்பம்



நாகப்பட்டினத்திலிருந்து காங்கேசன்துறை வரையான கப்பல் சேவை அடுத்த வாரம் முதல் மீண்டும் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் இந்தியாவின் நாகப்பட்டினத்திற்கும் மற்றும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையே ஆரம்பிக்கப்பட்ட பயணிகள் கப்பல் போக்குவரத்து சேவை பல முறை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்த வாரம் முதல் மீண்டும் கப்பல் சேவை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்தமானில் இருந்து நாக்கை வந்த ‘சிவகங்கை கப்பல்’ நாளை இலங்கைக்கு சோதனை பயணமாக வருகை தரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**65 லட்சம்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிர்ச்சி காத்திருந்தது. வங்கிக் கணக்கில் இருந்த 65 லட்சம் ஷரூபாவும் காணாமல் போயிருந்த நிலையில், யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவில் அது தொடர்பில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவின் பொறுப்பதிகாரி குணரோஜன் தலைமையிலான பொலிஸ் குழு இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்தது. விசாரணைகளின் அடிப்படையில் பெண் ஒருவர் உட்பட இருவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் அதிர்ச்சிகரமான தகவல்கள் வெளியாகியுள்ளன. குருநகரைச் சேர்ந்த நபரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களைக் கொண்டும், அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவல்களைக் கொண்டும் லாவகமான முறையில் வங்கிக் கணக்கில் இருந்த பணம் வேறொரு வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

குருநகரைச் சேர்ந்தவரின் கைபேசி இலக்கத்தைச் செயலிழக்கச் செய்து, அவரிடம் இருந்து பெறப்பட்ட ஆவணங்களைக் கொண்டு ஈ-சிம் ஒன்று சந்தேகநபர்களால் பெறப்பட்டுள்ளது.

தற்போது கைது செய்யப்பட்ட பெண்ணே கைபேசி நிறுவனத்துக்குச் சென்று உரையாடி, அந்த இலக்கத்துக்கு உரியவர் தற்போது தாய்லாந்தில் உள்ளார் என்று தெரிவித்து, தாய்லாந்து தொலைபேசி இலக்கத்தில் ஒருவரை உரையாட வைத்து ஈ-சிம்மைப் பெற்றுள்ளார். அதனால் பணப்பரிமாற்றம் தொடர்பான குறுந்தகவல்கள் உரியவருக்குக் கிடைப்பது தடுக்கப்பட்டுள்ளது.

தாம் சேகரித்த ஆவணவங்கள் தகவல்கள் என்பவற்றைக் கொண்டு, குருநகரைச் சேர்ந்தவரின் வங்கிக் கணக்குக்குள் செயலி ஊடாக நுழைந்த சந்தேநபர்களால், தற்போது கைது செய்யப்பட்ட பெண்ணின் வங்கிக் கணக்குக்கே முதலில் பணம் மாற்றப்பட்டுள்ளது. அதன்பின்னர் மற்றொருவரின் வங்கிக் கணக்குக்கு மாற்றப்பட்டுள்ளது. அந்த நபர் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் பல்கலைக்கழகம் ஒன்றில் ஐ.டி துறையில் பணியாற்றுபவர் என்று கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட இருவரும் யாழ்ப்பாணம் நீதவான் ஏ.ஏ ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டு, எதிர்வரும் 20 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

**பொது....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிகின்றது. நாளை காலை யாழ்ப்பாணம் தந்தை செல்வா அரங்கில் நடைபெறும் நிகழ்வில் பொது வேட்பாளர் குறித்து தமிழ் மக்கள் பொதுக் கட்டமைப்பின் சார்பில் அறிவிக்கப்படும். இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்காக அரியநேத்திரன் யாழ்ப்பாணம் வருவதாகவும் தெரியவந்துள்ளது. நாளைய நிகழ்வில் அவரும் பங்கேற்பர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அரியநேத்திரன் ஏற்கனவே நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தமையால் அவர் எந்தக் கட்சியையும் சாராமல் சுயாதீனமாகப் போட்டியிட முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால், கே.வி. தவராஜா முன்னர் நாடாளுமன்ற உறுப்பினராக இருக்காமையில் ஏதாவது ஒரு கட்சியின் சார்பிலேயே போட்டியிட முடியும்.

அதேவேளையில், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரை களமிறக்க வேண்டும் என்பதில் தமிழ்ப் பொதுக் கட்டமைப்பினர் உறுதியாக இருந்தமையும் அரியநேத்திரனின் தெரிவுக்கு ஒரு காரணமாகச் சொல்லப்படுகின்றது.

**மொட்டுவின்....**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேராவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டிருந்த நிலையில், இறுதி நேரத்தில் தனிப்பட்ட காரணங்களுக்காக அக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக இருக்க விருப்பமில்லை என்று தம்மிக்க பெரேரா, அக்கட்சியின் பொதுச்செயலாளருக்குக் கடிதம் மூலம் அறிவித்திருந்தார்.

அதனையடுத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவாகியுள்ளார். நேற்றிரவு நடைபெற்ற கட்சியின் உயர்மட்டக்கூட்டத்தில் இம்முடிவு உறுதிப்படுத்தப்பட்டது.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் இன்று அறிவிக்கப்படவிருந்த பின்னணியில் அக்கட்சியின் ஸ்தாபகர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று பத்தரமுல்ல, நெலும் மாவத்தை கட்சி அலுவலகத்தில் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்தச் சந்திப்பிலேயே நாமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக களமிறக்க முடிவாகியது.

இது தொடர்பான இறுதி முடிவை அறிவிப்பதற்காக கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் அரசியல் குழு உறுப்பினர்கள் இன்று காலை 7.00 மணிக்குக் கட்சியின் தலைமையகத்துக்கு அழைக்கப்பட்டனர். இக்கூட்டத்தில் வைத்து பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ தெரிவாகியுள்ளார் என்று கட்சியின் செயலாளர் நாயகம் சாகர காரியவசம் அறிவித்தார்.

# வெற்றிக்கோஷம் போடும் நாமல்

ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி நிச்சயம் வெற்றி பெறும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஜனாதிபதி வேட்பாளருமான நாமல் ராஜபக்ஷ இன்று சூளுரைத்துள்ளார்.

"எனது வெற்றி கட்சியின் வெற்றியாகும். கட்சியின் வெற்றி நாட்டின் வெற்றியாகும்." - என்றும் அவர் கூறியுள்ளார்.

அத்துடன், கட்சியில் இருந்து வெளியேறியுள்ள உறுப்பினர்களை மீளக் கட்சிக்கு வருமாறும் நாமல் அழைப்பு விடுத்துள்ளார்.



# விஜயதாச யாழ் விஜயம் குரு முதல்வருடன் பேச்சு

யாழ்ப்பாணத்தில் விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாச ராஜபக்ஷ இன்றைய தினம் யாழ் ஆயர் இல்லத்தில் குரு முதல்வரைச் சந்தித்தார்.

குரு முதல்வர் ஜெபரட்டணம் அடிகளாருடன் தற்போதைய தேர்தல் நிலவரம் தொடர்பாக அவர் கலந்துரையாடினர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நாமல் ராஜபக்ஷ வை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்துள்ள நிலையில் ஆளும் கட்சியிலுள்ள ரனில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக போட்டியிடவுள்ளார். எனவே தனது நிலைப்பாடு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இதன்போது மக்கள் தமக்கு சேவை செய்யக்கூடிய ஒருவரை ஜனாதிபதியாக தெரிவு செய்வார்கள் என குறிப்பிட்ட, விஜயராச ராஜபக்ஷ தேசிய இன பிரச்சனை தொடர்பிலே தான் ஜனாதிபதி ஆனால் எவ்வாறான தீர்வை வழங்குவேன் எனவும் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும் சிறையிலுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாகவும் தனது கருத்துக்களை தெரிவித்தார்.

# ஜனாதிபதி தேர்தல் எனக்கு போட்டியல்ல

## ரணில் சொல்கிறார்

என்னைப்பொறுத்தவரை இந்த ஜனாதிபதித் தேர்தல் தனக்கு ஒரு போட்டி அல்ல. நான் யாரிடமும் சண்டையிட வரவில்லை. தான் தனது கொள்கைகளுடன் வருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

உண்மையைச் சொல்லி நாட்டைக் காப்பாற்றத் தயாரா அல்லது பொய்யைக் கூறி நாட்டைக் குழப்பத் தயாரா என்பதைச் சிந்திக்க வேண்டும். நீங்கள் விரும்பினால் எனக்கு வாக்களியுங்கள். இதை முன்னெடுத்துச் செல்வேன் என்றார்.

நான் மற்றவர்களைப்போல வாக்குறுதிகளை அளிப்பதில்லை. செய்து காட்டியுள்ளேன். ஏனையோர் வாக்குறுதிகளை வழங்குவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஊடக பிரதானிகளுடன் கொழும்பில் இன்று நடைபெற்ற சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்





செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட



காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# நாமலுடன் 12 மொட்டுக்களே உள்ளனர் அவர்களில் ஐந்து பேர் ராஜபக்ஷக்கள்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



ராஜபக்ஷவுடன் தேனிலவைக் கழிக்கும்வரை நாங்கள் அரசாங்கத்தில் சேர மாட்டோம் என்று எதிர்க்கட்சிகள் சில கூறியது நினைவிருக்கிறது. தற்போது அவர்களுக்கு இருந்த தடை நீங்கியதாக தெரிகிறது. அதன்படி, எதிர்வரும் வாரத்தில் மேலும் பல கட்சித் தாவல்கள் நடைபெறஉள்ளனதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், சர்வஜன பலயவின் நிறைவேற்று உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மஹிந்தவை விட்டு ரணிலிடம் தாவியுள்ளதாகவும் தற்போது நாமல் ராஜபக்சவுடன் 12 பொதுஜன பெரமுன எம்.பி.க்கள் மட்டுமே எஞ்சியுள்ளதுடன்

அவர்களில் ஐந்து பேர் ராஜபக்சக்களெனவும் தெரிவித்துள்ளார்.

பொரளையில் உள்ள சர்வஜன பலயவின்தலைமையகத்தில்இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர், ஒவ்வொருவரும் தமக்கு

அமைச்சுப் பதவிக்கான அழைப்புகளை அனுப்பியதாகவும், ஆனால் பதவிக்கு ஆசைப்பட்டு தனது கொள்கைகளுக்கு துரோகம் இழைக்கவில்லை எனவும்தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்புமனுக்கள்கோரப்பட்டதையடுத்து, கட்சித் தாவல்கள் இடம்பெற்று வருகின்றன. பசில் ராஜபக்சவை நெருங்கியிருந்தவர்கள் மகிந்தவின் மடியை விட்டு விட்டு, இப்போது ரணிலின் மடிக்கு தாவுகின்றன. ரோஹித அபேகுணவர்தன, எஸ். எம்.சந்திரசேன போன்ற பெரிய பெரியவர்கள் கூட இப்போது மறுபக்கம் தாவியுள்ளனர்.

இன்று நாமல் ராஜபக்சவுடன் 12 மொட்டு எம்.பி.க்கள் மட்டுமே எஞ்சியுள்ளனர். அவர்களில் ஐந்து பேர் ராஜபக்சக்கள். ராஜபக்சவுடன் தேனிலவைக் கழிக்கும் வரை நாங்கள் அரசாங்கத்தில் சேர மாட்டோம்

என்று எதிர்க்கட்சிகள் சில கூறியது நினைவிருக்கிறது. தற்போது அவர்களுக்கு இருந்த தடை நீங்கியதாக தெரிகிறது. அதன்படி, எதிர்வரும் வரும் வாரத்தில் மேலும் பல கட்சித் தாவல்கள் நடைபெற உள்ளன." இவ்வாறு தெரிவித்தார் விமல் வீரவன்ச.

# திருத்தத்தில் குறையிருந்தால் நீதிமன்றத்தை நாடுங்கள்

## அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த

மாகாண சபை தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்காக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குறைபாடுகள் காணப்பட்டால் நீதிமன்றத்தை நாடுங்கள் என சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் மாகாண சபை தேர்தல்கள் சட்டமூலத்தை இரண்டாம் வாசிப்புக்காக எம்.ஏ.சுமந்திரன் சபைக்கு சமர்ப்பித்தார்.

இதனையடுத்து தமிழ் தேசிய கூட்டமைப்பின் வாக்குகளை பெறுவதற்காகவே மாகாண சபை சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த சட்டமூலத்தினால் வடக்கில் வாழும் சிங்கள, முஸ்லிம் மக்கள் பாதிக்கப்படுவார்கள் எனதேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் எம்.பி.யுமான விமல் வீரவன்ச குற்றம்சாட்டினார்.

இக்குற்றச்சாட்டுக்கு சபை முதல்வரும் அமைச்சருமான சுசில் பிரேமஜயந்த பதிலளிக்கும் போதே மாகாண சபை தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் இரண்டாம் வாசிப்புக்காக மாத்திரமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கு முறையான வழிமுறைகளை கையாள வேண்டும். உயர்நீதிமன்றத்தை நாடுவதற்கு வாய்ப்பளிக்கப்படும். குறைபாடுகள் காணப்பட்டால் நீதிமன்றத்தை நாடுங்கள்" என்று தெரிவித்தார்.








# மிதி வெடி

கெடுகுடி சொற்கேளாது.... எண்டு ஒரு பழமொழி கேள்விப்பட்டிருப்பியள் தானே?

இங்க கனபேர் அப்பிடித் தான் பாருங்கோ... தான் செய்யுறது முழுப்பிழை எண்டு தெரிஞ்சும் "ஏலும் எண்டாப் பண்ணிப் பாரன்" எண்டு விருதுக்கு வேட்டையாடுகினம்....

சத்தியமா நான் அந்த வைத்தியத் தம்பியைச் சொல்லேல்ல.... அந்தப்பொடி சொல்ல வந்த விசியத்தில சரி பிழை இருக்கு... ஆனாலும் செய்யுறது முழுக்க அலப்பறை பாருங்கோ....

ஆரோ அண்டைக்குச் சொன்னது போல உண்மையா அந்தப்பொடியில பிழையில்லப் பாருங்கோ.... உசுப்பேத்தி.. உசுப்பேத்தி அந்தாளின்ட உடம்பை இப்ப ரணகளமாக்கிப் போட்டு நிக்கினம்.

என்னவோ... இப்பேதைக்கு உதைப் பற்றிக் கதையாதேங்கோ.... ஒண்டுக்கு ரெண்டு நீதிமன்றத்தில வழக்குகள் நடக்குது... பிறகு நீதிமன்ற அவமதிப்பு எண்டு இந்தத் தள்ளாத வயசில நானும் "கோட்டு"ப் படி ஏறி–இறங்க வேண்டி வந்துடும்... வாழ்க்கையில ஒருக்காத் தன்னும் போய் வந்து பழக்கமில்ல...

நான் சொல்ல வந்தது இங்க ஒரு நிறுவனத்தில இருக்கிற பிரதம (....) அதிகாரி ஒருத்தர் "கெடுகிறன் பந்தயம் பிடி" எண்டு சொல்லி ஆடாடெண்டு ஆடிப்போட்டு இப்ப முழுசிக் கொண்டு திரியுறாராம். அவையின்ர "டிப்பாட்மென்ற்"றில ஏற்கனவே ஏகப்பட்ட பிக்கல் பிடுங்கல் இருந்திருக்கு... கிட்டத்திட்ட 5 வரியத்துக்கு மேலா நிரந்தரமான அதிகாரியை நியமிக்காமல் அதிகாரத்தில இருந்த "சின்னையா"வே நடத்திக் கொண்டு வந்திருக்கிறார். திடீரெண்டு போன வரியத்துக்கு முந்தின வரியம் நிரந்தர இடத்தை நிரப்ப வெளிக் கிட, இப்ப இருக்கிறவர் அவரை, இவரைப் பிடிச்சு அதிகாரக் கதிரையில ஏறி இருந்திட்டார். இவரைக் கொண்டுவரவேணும் எண்டு பாடுபட்ட தியேட்டர் காரருக்கு வால் பிடிக்கிற அர்ச்சுனன் காவிய வில்லுத் தான் அரும்பாடுபட்டதாம். இப்ப அதே வில்லு மாறி வளைஞ்சு போய் நிக்குதாம்.

"தெரியாத பேயை விடத் தெரிஞ்ச பிசாசே மேல்" எண்டு ஆளில்லாக் கொடுமைக்கு அறிஞ்சவன் தெரிஞ்சவனை உள்வாரியாக் கொண்டு வந்து இருத்தின எல்லாரும் இப்பத் தலையில கைவச்சுக் கொண்டு திரியினமாம்.... போகிற போக்கைப் பாத்தால் தலையில துண்டு போட்டுக் கொண்டு தான் திரிய வேணும் போல.....

சிக்கல்படுகிற அதிகாரி கொஞ்ச நாளைக்கு முன்னால எக்கச்சக்கமா மாட்டுப்பட்டவராம்.... கூட இருந்தவங்கள் தான் பாவம், பழிக்கஞ்சிக் காப்பாத்தி விட்டிருக்கினம்... "சூடு கண்ட பூனை அடுப்பங்கரைய நாடாது" எண்டு தானே நீங்கள் அறிஞ்சிருப்பியள், இங்க (பொம்பிளைச்) சூடு கண்ட அந்தப் பூனை திரும்பத் திரும்பப் பால் குடிக்க வெளிக்கிட்டு மீள முடியாமல் மாட்டுப் பட்டுப் போய் நிக்குதாம். "நக்கிற நாய்க்குச் செக்கென்ன – சிவலிங்கம் என்ன?" எண்டு கண்ட இடத்திலையும் ("போனில") வாய் வைச்சு எல்லாரும் "ரெக்கோடிங்" கோட திரியுறாங்களாம்... "உண்டு கொழுத்தால் நண்டு வலையில் இராது" எண்டு திரிஞ்சவரை இப்ப தண்ணியில்லாக் காட்டுக்கு மாத்தியிருக்கினமாம்....

இதில வேடிக்கை என்னவெண்டா, நிரந்தர அதிகாரி எண்டு நியமனம் குடுத்தவரை எப்பிடி கண்ட இடத்துக்கும் மாத்த ஏலும் எண்டது தானாம் பிரச்சினை.... அதுவும், அங்க இருக்கிற வாலுகளால தானாம். "ஓட்டைக் கப்பலுக்கு ஒன்பது மாலுமி" எண்டுறது போல, ஆளணி ஒதுக்கீடே இல்லாமல் "தியேட்டர்" காரருக்கா எடுத்து விட்ட நாலைஞ்சுபேர் இருக்கினமாம் அவையை மாத்தி விட்டால் எந்தப் பிரச்சினையும் வராது எண்டு அங்கின கதைக்கினம். ஆனா அங்க இருககிற "சின்ன ஐயா" அவையளை விட மாட்டாராம். ஏனெண்டா அவை வைச்சுத் தான் அந்தச் சின்னையா "டிப்பாட்மென்ற்" நடத்துறாராம்.

"தியேட்டர் – தியேட்டர்" எண்டு அங்க தாங்கள் அடிக்கிற கூத்து எல்லாத்தையும் மறைக்கிறதுக்குப் பெரியவரிட்டப் போய் சொல்லுற சாக்கு "அவர் சொல்லுறார் – அவர் இவரை விரும்பேல்ல" எண்டுறது தானாம்... எப்பப் பாத்தாலும் அந்த அலுவலகத்தில "அமைச்சருக்கு அந்தாதி" படிக்கிறது தானாம் வேலை.

அது சரி, எனக்கிருக்கிருக்கிற "டவுட்" என்னெண்டா.... "தியேட்டர்" கார அமைச்சரின்ர பேர் அங்க கடுமையா அடிபடுது... அமைச்சர் சொனனார் – அமைப்பாளர் சென்னார் எண்டெல்லாம் அல்லக்கைகள் தாங்கள் நினைச்சமாதிரிக் காரியத்தைக் கொண்டு போறது அவருக்குத் தெரியுமோ எண்டது தான்....

ஆனாலும் பாருங்கோ... "ஓடு மீன் ஓட உறுமீன் வருமளவும் காத்திருக்குமாம் கொக்கு" எண்டு எப்பபடா உள்ளுக்குள்ள பாயலாம் எண்டிருந்த "தியேட்டர்" காரருக்கு இது ஒரு வாய்பாயும் போயிருக்கலாம் தானே ...?

ஆண்டவா... அங்க என்ன தான் நடக்குது தெண்டு ஆருக்குமே விளங்குதில்லை.... "உடையவன் பாரா வேலை ஒரு முழங் கட்டை" எண்டு சொல்லுமாப் போல.... நிரந்தரமா அதிகாரி நியமிக்கப்பட்ட பிறகும் மூக்கை நுழைக்கிற "சின்னையா" தான் பிரச்சினையா? இல்லாட்டில் உண்மையிலேயே அமைச்சர் தான் ஆட்டுவிக்கிறாரோ.... ? ஆர் அறிவார் பராபரமே?

மலியவிட்டுச் சந்தைக்கு வரத்தானே வேணும்....? பொறுங்கோ பாப்பம்!

நரமுனி

# இரு நாட்டு மீனவர் பிரச்சினை: குட்டையில் மீன்பிடிக்கும் சீனா



**அகிலன்**

இலங்கை – இந்திய மீனவர் பிரச்சினை மீண்டும் சூடுபிடித்துள்ளது. நெடுந்தீவுக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களுக்கும் இலங்கைக் கடற்படைக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையில் இந்திய மீனவர் ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்திருக்கின்றார். சில நாட்களுக்கு முன்னரும் இதேபோன்ற சம்பவம் ஒன்றில் இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் பலியானார்.



இந்தச் சம்பவங்கள் இரு நாடுகளுக்கும் இடையிலான மீனவர் பிரச்சினை தொடர்ந்தும் கொதி நிலையில் இருப்பதை உணர்த்துகிறது.

அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய இந்தப் பிரச்சினை அறிக்கைகள், கண்டனங்களுடன் மட்டுமே நின்றுவிடுகின்றது. நிரந்தரமான ஒரு தீர்வைக்காண்பதற்கு இரு நாட்டு அரசியல் தலைவர்களும் துணிவதாகத் தெரியவில்லை. பிரச்சினை தொடர்வதை தமக்கான வாய்ப்பாக அவர்கள் கணக்குப் போட்டு வைத்துள்ளார்கள். இந்த நிலைமைகளைப் பயன்படுத்திக கொண்டு வடபகுதியில் தனது ஆதரவை வளர்ப்பதற்கான உபாயத்தை சீனா வகுத்துச் செயற்படத் தொடங்கியுள்ளது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிவந்து மீன்பிடிக்கின்றார்கள் என்பது மட்டும்தான் பிரச்சினையல்ல. எல்லைதாண்டி வரும் மீனவர்கள் பயன்படுத்தும் உபகரணங்கள்தான் பிரச்சினை. அவர்கள் பொட்டம் ரோலர் எனப்படும் மடி வலை மீன்பிடி முறையைப் பயன்படுத்துகின்றார்கள். அதனைவிட பலம்வாய்ந்த பாரிய படகுகளில் பெரும் கூட்டமாக வருகின்றார்கள். நெடுந்தீவு, மன்னார் போன்ற பகுதிகளில் வாரத்துக்கு மூன்று அல்லது நான்கு தினங்களுக்கு அவர்களின் ஆக்கிரமிப்பைக் காணமுடியும்.

அதேவேளையில், தமிழக மீனவர் உயிரிழந்தமைக்கு இந்திய அரசும் இராஜதந்திர மட்டத்தில் தமது கண்டனத்தை இலங்கைக்குத் தெரிவித்திருந்தது. அதேபோல கடந்த மாதம் இலங்கைக் கடற்படைச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்த போதும், இலங்கை அரசாங்கம் உத்தியோகபுர்வமாக தமது கண்டனத்தை இந்தியாவுக்குத் தெரிவித்திருந்தது. இந்தக் கண்டனங்கள் உள்நாட்டு அரசியலில் எழக்கூடிய அழுத்தங்களைச் சமாளிப்பதற்கான உத்திகளே தவிர, இராஜதந்திர ரீதியில் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தக்கூடியவையல்ல.

உண்மையில் இந்தப் பிரச்சினை தொடர்வதால் பாதிக்கப்படுவது வடபகுதி மீனவர்களும், தமிழக மீனவர்களும்தான். வடக்கு மீனவர்களின் பாதிப்புக்கள் குறித்து முன்னரே தெரிவிக்கப்பட்டது. தமிழக மீனவர்களைப் பொறுத்தவரையில், அங்கு பாரிய ரோலர்களை வைத்திருப்பவர்கள் செல்வாக்கு மிக்க அரசியல்வாதிகளாகவும், முதலாளிகளாகவுமே இருக்கின்றார்கள். அவர்களுடைய கட்டளையின்படிதான் அந்தப் படகுகள் இலங்கைக் கரைக்குள் பிரவேசிக்கின்றன. இலங்கைக் கரைகளில் அவர்களால் பிடிக்கப்படும் மீன், இறால் என்பன கொழுத்த விலைக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தமது வருமானத்துக்காக அவர்கள் அப்பாவி மீனவர்களைப் பலியாக்குகின்றார்கள்.

அதேவேளையில், இராமேஸ்வரம் பகுதியில் தமிழக மீனவர்கள் போராட்டங்களை நடத்துவதைப் போல இலங்கையில் வடபகுதி மீனவர்களும் அடிக்கடி போராட்டங்களை நடத்துவதை காணமுடிகின்றது. இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மன்னாரிலும், யாழ்ப்பாணத்தில் இந்திய துணை உயர் ஸ்தானிகராலயத்தை முற்றுகையிட்டும் அவர்கள் அடிக்கடி போராடுவதைக் காணமுடிகின்றது. இரண்டு நாட்டு அரசியல்வாதிகளாலும் இரு நாட்டு மீனவர்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஈழத் தமிழர்களை தமது தொப்புள் கொடி உறவுகள் எனக்கொண்டாடும் தமிழக தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பதால் ஈழத் தமிழர்கள் எந்தளவுக்குப் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை அறியாதது போல நடிக்கின்றார்கள். தமிழகத்தில் உள்ள வாக்குகள்தான் அவர்களுக்கு முக்கியம். இது போன்ற நிலைமைகளால்தான் இந்தப் பிரச்சினை பல வருடகாலமாக தீர்க்கப்படாத ஒன்றாக இருந்தது வருகின்றது. தமிழக மீனவர்களின் ஆக்கிரமிப்பால், பல நாட்களாக தொழிலுக்கே செல்ல முடியாத நிலையில் மன்னார், நெடுந்தீவு மீனவர்கள் உள்ளார்கள். தமிழகத் தலைவர்கள் மீதான நம்பிக்கை காணாமல் போவதற்கும், இந்திய எதிர்ப்புணர்வு வளர்வதற்கும் இவை காரணமாகின்றது.

கலங்கிப்போயுள்ள இந்தக் குட்டையில் இப்போது மீன்பிடிக்க சீன முற்படுகின்றது. வடபகுதியில் கால் பதிக்கவும், மக்களின் மனங்களில் இடம்பிடிக்கவும் இதனைப் பயன்படுத்துவதுதான் சீனாவின் திட்டம். வடக்கு மீனவர்கள் வாழ்வாதாரத்தை இழந்திருக்கின்றார்கள். அவர்களுக்கு நம்பிக்கையைக் கொடுப்பவர்களாக யாரும் இல்லை என்பதும் சீனப் புலனாய்வாளர்களின் கண்டுபிடிப்பு. சீன அரிசி, உலர் உணவுப் பொதிகள், சீனாவிலிருந்து மீன்பிடி வலைகள், கடற்றொழிலுக்கான உபகரணங்கள் என்பவற்றுடன் சீனத் தும துவரும், துதரக அதிகாரிகளும் இப்போது அடிக்கடி வடபபகுதிக்கு விஜயம் செய்கின்றார்கள்.

வடக்கில் சீனா கால்பதிப்பதற்கு ஏதோ ஒருவகையில் இந்தியாவின் செயற்பாடுகள்தான் காரணமாகின்றது. மீனவர் பிரச்சினை தொடரும் நிலையில், அதனைத் தமக்கு எவ்வாறு சாதகமாகப் பயன்படுத்தலாம் என்பதைத்தான் சீனாவின் புலனாய்வாளர்களும், கொள்கை வகுப்பாளர்களும் ஆராய்வார்கள் என்பதை புதுடில்லி புரிந்துகொள்ளாமலா இருக்கின்றது?



# வேட்பாளர்களிடம் யோசனைகளை முன்வைக்க ஞானசார தேரர் திட்டம்

## ஐயாயிரம் பிக்குகளையும் அழைக்கவுள்ளாராம்



ஆயிரக்கணக்கான பிக்குகளை ஓரிடத்தில் அணிதிரட்டி பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களை அவ்விடத்திற்கு அழைத்து நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் தங்களால் தயாரிக்கப்பட்ட யோசனைத் திட்டங்களை அவர்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பொதுபல சேனா பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பொதுபல சேனா அலுவலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

பொதுபல சேனா பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் கூறுகையில், “அரசியல் தலைவர்கள் இந்த நாடு வங்குரோத்தடைந்த நாடு என்றும், 75 வருட சாபம் என்றும் கூறுகின்றனர். ஆனால் 1950 இல் இருந்த நிலைமையில் இந்த நாடு இல்லை. பல முன்னேற்றங்கள் உள்ளன” என்றும், “இந்நிலையில் நாடு தொடர்பில் அத்தியாவசிய விடயங்களை அடிப்படையாகக் கொண்ட யோசனைகளை தயாரித்து நான்காயிரம், ஐயாயிரம் பிக்குகளை ஓரிடத்திற்கு அழைத்து தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களையும் அவ்விடத்திற்கு அழைக்க எதிர்பார்த்துள்ளோம்” என்றும் ஞானசார தேரர் தெரிவித்தார்.

அவர்களிடம் தமது யோசனைகளை முன்வைக்கவும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும், மக்களுக்கு உள்ள பிரச்சினைகளை இவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்றும், அவர்கள் வழங்கும் பதில்களை அடிப்படையாகக்கொண்டு நாட்டை நேராக்கக் கூடியவரை ஜனாதிபதியாக்க மக்கள் சுதந்திரமாக நடவடிக்கை எடுக்க வேண்டும்” என்றும் பொதுபல சேனா பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் மேலும் தெரிவித்தார்.

# ரமகிந்தவின் அனுமதியை பெற்றே ரணிலுக்கு ஆதரவு வழங்கினோம்

## அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவிப்பு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவர் மகிந்த ராஜபக்ஷவின் அனுமதியுடனேயே தாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாக அமைச்சரவை பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மொட்டுக் கட்சி இரண்டாகியுள்ள நிலையில் அமைச்சரவையிலும் அந்தக் கட்சியினர் இருக்கின்றனர். இதன்படி அமைச்சரவைக்குள்ளும் பிரிவுகள் ஏற்பட்டுள்ளனவா? என்றும் அவரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

இதன்போது பதிலளித்த அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சரவைக்குள் எந்தப் பிளவும் கிடையாது. நாங்கள் மொட்டுக் கட்சியின் உறுப்பினர்களாக செயற்படுகின்றோம். நாடு மீண்டும் அழிவுக்குள் செல்லாதவாறு, தேசிய வேலைத்திட்டத்துடன் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளோம்.

கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷவுக்கு அமைச்சர்கள் என்ற ரீதியில் அறிவித்தோம். இதன்போது, உங்களின் விருப்பப்படி செயற்படுமாறு அவர் அனுமதி வழங்கியிருந்தார். அதனை தொடர்ந்து நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில், மொட்டுக் கட்சி வேறு வேட்பாளரை நியமிப்பதை எதிர்ப்பதாகவும், ரணிலுக்கு ஆதரவளிப்பதாகவும் அறிவித்திருந்தோம்.

இதேவேளை வேறு வேட்பாளருக்கு ஆதரவளிப்பது தவறு என்றும், அவ்வாறு ஆதரவளித்தால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதனை நாங்கள் ஆதரித்தோம். நாங்கள் ஒழுக்கத்தை மீறி செயற்படவில்லை. நாட்டை அபிவிருத்தி தொடர்பில் தெளிவான வேலைத்சூதிட்டத்தை முன்வைத்துள்ள ரணில் விக்கிரமசிங்கவையே ஆதரிக்கின்றோம்.

இவ்வாறு அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்

வயலுடன் கூடிய
மேட்டுக்காணியும்
பண்ணை வீடும்
பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை

மரங்கள் நிறைந்த
இயற்கை சூழலில்
ஓய்வுகால வீட்டிற்கான
காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்

கடலும் ஆறும்
அருகருகே அமைந்த
மீன்பாடும் தேன்நாட்டில்
விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி

மலைகளின் நடுவில்
குளிர்ந்த பிரதேசத்தில்
வாசனைத் திரவியமும்
சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் நிரந்தர வீடுகள்





(ஹஸ்பர் ஏ.எச)

திருகோணமலை மக்கள் சேவை மன்றத்தினால் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் நிரந்தர வீடுகள் நிர்மாணித்து அவை பயனாளிகளின் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று மன்றத்தின் தலைவர் எம். ரீ. ஏம். பாரிஸ் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த யுத்தம் மற்றும் தற்போதைய பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டு மிக நீண்டகாலம் நிரந்தர வீடுகள் இன்றி கஸ்டப்படும் குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 25 வீடுகள் நிர்மாணிக்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

பெல்ஜிய நாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனமான செலவிப் (ளுநுடுயுஏஜீ) நிறுவனத்தின் நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் வாழ்வதற்கான இல்லறம் செயற்றிட்டத்தின் கீழ் முதற்கட்டமாக ஆறு பயனாளிகளுக்கு வீடுகள் கையளிக்கப்பட்டன.







# 48 அம்ச உடன்படிக்கைக்கு அமைவாகவே சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிக்க முடிவு

## முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாட்டை விளக்கும் மனோ



ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு நிபந்தனையுடன் கூடிய ஆதரவு வழங்குவதற்கு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தமிழ் முற்போக்கு கூட்டணியின் 18 உறுப்பினர்களை கொண்ட அரசியல் குழுவின் ஏகமனதான தீர்மானத்துக்கு அமைய இம்முடிவு எட்டப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

“எமது கட்சி இலங்கையில் சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளிடையே மிகப்பெரிய அரசியல் இயக்கமாகும். கட்சி கொண்டுள்ள வாக்கு பலமானது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் சஜித் பிரேமதாசவுக்கு மிகப்பெரிய பலமாகும்.

எங்கள் மக்களுடைய நலனுக்காக நிபந்தனையுடன் கூடிய ஆதரவை வழுங்குவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. 48 அம்சங்களை கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

இளைய தலைமுறையின் கல்வி, சுகாதாரம், போசாக்கு, வேலைவாய்ப்பு, காணியுரிமை மற்றும் வீட்டுரிமை உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மனோ கணேசன் தெரிவித்தார்.




# இரு இடங்களில் துப்பாக்கி சூட்டில் இருவர் படுகாயம்

மேல் மாகாணத்தின் இருவேறு பகுதிகளில் நேற்று இரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகிய இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஜா-எல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாக்கவிட்ட பகுதியில் நேற்று இரவு ஒருவரை இலக்கு வைத்து அடையாளம் தெரியாத நபர்களினால் துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிய ஒருவர் காயமடைந்துள்ளதாகவும், துப்பாக்கி சூடு நடத்தியவர்கள் தப்பிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடவத்தை பிரதேசத்தில் வசிக்கும் 43 வயதுடைய நபரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதுடன், தற்பொழுது கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இதேவேளை, கம்பஹா தம்மிட்ட பிரதேசத்தில் நேற்று இரவு மற்றுமொரு துப்பாக்கிச் சூட்டு சம்பவம் பதிவாகியுள்ளது. மோட்டார் சைக்கிளில் பயணித்த நபர் ஒருவரை இலக்கு வைத்து மற்றுமொரு மோட்டார் சைக்கிளில்வந்த அடையாளம்தெரியாத இருவர் துப்பாக்கி சூடு நடத்தி தப்பிச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான உடுகம்பொல பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடைய நபர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மாணவர் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் மாணவர் சந்தை

(எம்.ஏ.றமீஸ்)

அக்கரைப்பற்று முனவ்வறா கனிஷ்ட கல்லூரியின் ஆரம்பப் பிரிவு தரம்-03 மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட மாதிரி சந்தை நிகழ்வு பாடசாலை வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

அதிபர் எம்.ஐ.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது ஆரம்பப் பிரிவு மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் கலந்து கொண்டனர். ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் மற்றும் பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் இம்மாணவர் சந்தை வெகு விமர்சையாக இடம்பெற்றது.

மாணவர்களின் கணித மற்றும் தமிழ் அறிவை மேம்படுத்துவதுடன், சமூக தொடர்பாடல் விருத்தி, வியாபார நடைமுறைகள், சுகாதார பழக்க வழக்கங்கள், நட்புறவுச் செயற்பாடுகள், அன்றாட வாழ்கைக்குத் தேவையான விடயங்களை முன்னுரிமை அடிப்படையில் அணுகுதல் போன்ற பல்வேறு விடயங்கள் இதன்மூலம் மாணவர்களுக்கு தெளிவு படுத்தப்பட்டன.

இதன்போது மாணவச்சிறுவர்கள் மகிழ்வுடன் தமது விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டதுடன், பாடசாலையின் ஏனைய மாணவரகளும் பெற்றோர்களும் இணைந்து இச்சந்தையில் பல்வேறு பொருட்களைக் கொள்வனவு செய்தனர். குறித்த மாதிரி சந்தை செயற்பாடானது மாணவர்களின் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் செயற்பாடாய் அமைந்தமை குறிப்பிடத்தக்கது




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.08.2024இல் வெளியிடப்பெற்றது.